**செய்தி வெளியீடு எண் : 170** **நாள் : 25.01.2024**

**செய்தி வெளியீடு**

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுரைக்கிணங்க, 2011ம் ஆண்டு முதல், ஆண்டுதோறும், ஜனவரி, 25ம் தேதி, தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டு, 14வது தேசிய வாக்காளர் தினம், 25.01.2024 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் கொண்டாடப்பட்டது. திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை வழங்கினார். மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர். என். ரவி அவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. இவ்விழாவில் அரசு தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., மாநிலத் தேர்தல் ஆணையர் டாக்டர் வி. பழனிக்குமார், இ.ஆ.ப., (ஓய்வு) ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாண்புமிகு இந்திய தலைமை தேர்தல் ஆணையர் அவர்களின் தேசிய வாக்காளர் தினம் குறித்த காணொலி ஒளிபரப்பப்பட்டது. பின்னர் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர். என். ரவி அவர்கள் தலைமையில் வாக்காளர் உறுதிமொழி எடுக்கப்பட்டது. மேலும், கீழ்க்காணும் காணொலி மற்றும் புத்தகங்கள் வெளியிடப்பட்டன:–

1. வாக்காளர் விழிப்புணர்வு குறித்த பாடல்
2. வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான சித்திரக் கதை புத்தகம்

மேலும், சிறப்பாக பணியாற்றிய தேர்தல் அலுவலர்களுக்கும் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான சுவரொட்டி வடிவமைப்பு போட்டி, பாட்டுப் போட்டி போன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in